1982 செப்டம்பர் 7]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நிதி ஆதாரம் ஜனத்தொகையைப் பார்த்து, சில சட்ட விதிகளைப் பார்த்துத் தான் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது, 1979 ஆம் ஆண்டே நகராட்சியாக உயர்த்துவதற்குரிய தகுதி பெற்றுவிட்டது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது, அது இன்னும் பரிசீலனையில் இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு சட்டத்தைச் சொல்லி நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை, உடனடியாக உயர்த்துவதற்குரிய ஆதாரங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டுவிட்டதே, அது ஏன் இன்னும் காலதாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய 'பேன் ஆர்டர்' அதாவது இது போன்ற பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்துவது என்பதெல்லாம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்ற நிலை இருந்தது. ஆனால், திருமங்கலம் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு உயர்த்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த விதிமுறைகள் தளர்த்தப்படுகிற சூழ்நிலை இன்னும் இந்தப் பேரூராட்சியைப் பொறுத்த வரையில் வரவில்லை. அதனால் வருகின்ற காலம் வரையிலே பொறுத்திருந்தால் கண்டிப்பாகக் கிடைக்கும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி விரைவிலே நகராட்சியாக ஆக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்கள். விருதுப்பட்டி பேரூராட்சியாக இருந்தது நகராட்சியாக மாற்றப்பட்ட போது, விருதுநகர் என்று மாற்றம் செய்யப்பட்டது. அதேபோல் உசிலம்பட்டி நகராட்சியாக மாற்றம் செய்யப்படும்போது உசிலை நகர் என்று மாற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திருப்பாலைக்குடி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

* வினா எண். 13—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டம் R.S. மங்கலம் ஒன்றியத்தில் உள்ள திருப்பாலைக்குடி மருத்துவமனையை விரிவுபடுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இங்கு ஒரு அரசு மருந்தகம் 1982–83 ஆம் ஆண்டு தொடங்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பாலைக்குடியிலே கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் உள்ளனர். அது ஒரு பெரிய நகரத்தைப்போல இருக்கின்றது. அந்த ஊரிலே ஒரு சிறிய மருந்தகம் கூட இல்லை. நீண்ட நாட்களாக இந்தப் பகுதியிலே ஒரு அரசு மருத்துவமனை வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. அது விரைவில் கொண்டுவரப்படுமா என்று தெரிவித்து, அதற்கான ஏற்பாட்டை அரசு உடனடியாக செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இப்போதுதான் அரசு மருந்தகத்தை ஏற்படுத்துவதற்காக அரசாணை போட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு அதற்காக Government have also sanctioned a recurring expenditure of Rs. 20,000. 20 ஆயிரம் ரூபாயை அதற்காக ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சருக்காகவும், நான் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சருக்காக 7 ஆயிரம் ரூபாயும், பர்னிச்சர் வாங்குவதற்கு 8 ஆயிரம் ரூபாயும் போட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நாம் உடனடியாக மருத்துவமனையைத் தனியாக ஏற்படுத்த முடியாது. மருந்தகத்தைத் துவக்க இருக்கின்றோம். அதற்குப் பிறகு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மருத்துவமனை வயபிளாக இருக்குமா என்று பார்த்து, அதை ஆரம்பிக்கலாம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருந்தகத்திற்கு ஒரு சில படுக்கைகளையாவது சாங்ஷன் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்போது அது மருத்துவமனையாக ஆகிவிடும். நான் ஏற்கனவே சொன்னதைப் போல, பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

காஞ்சிபுரம் அரசு மருத்துவமனை.

* வினா எண். 14—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் அரசினர் மருத்துவமனைக்கு சராசரியாக ஒரு நாளைக்கு வரும் புறநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) உள் நோயாளிகள் எண்ணிக்கை (படுக்கை) அனுமதிக்கப்பட்டுள்ளது எவ்வளவு?

(இ) எத்தனை உள்நோயாளிகள் தற்போது உள்ளனர்?